செ.கு. எண்: 216

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.11.2011

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக 28.11.2011 அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அம்மன் குளத்துமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகள் அபிராமி மற்றும் வி.அகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரமூர்த்தி என்பவரின் மகன் சுகுமார் ஆகியோர் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்ற செய்தியையும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஐயப்பன் என்பவரின் மகன் கார்த்திக் மற்றும் கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், சேதுவராயன் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் பச்சமுத்து ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், திருநெடுங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சப்பாணி என்பவரின் மகன் மாரிமுத்து சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்